*செய்தி வெளியீடு : 43* **நாள் :24.03.2020**

**தமிழ்நாடு ஆளுநர், திரு.பன்வாரிலால் புரோகித் அவர்களின்**
**உகாதி, குடிபட்வா மற்றும் செடி சந்த் வாழ்த்துச் செய்தி**

மங்களகரமாகக் கொண்டாடப்பட்டு வரும் உகாதி, குடிபட்வா மற்றும் செடி சந்த் பண்டிகைகளை முன்னிட்டு இதயப்பூர்வமான நல்வாழ்த்துக்களை தமிழகத்திலுள்ள தெலுங்கு, கன்னடம், மராத்தி மற்றும் சிந்தி மொழி பேசும் மக்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இத்தகைய பண்டிகைகள் புத்தாண்டின் பாரம்பரியத் தொடக்கத்தையும், நமது நாட்டின் ஒருமித்த பண்பாட்டையும் வளமான பாரம்பரியத்தையும் பிரதிபலிப்பதாக அமைந்துள்ளன. இப்பண்டிகைகள், நம்முடைய வாழ்விற்கு செழிப்பையும், மகிழ்ச்சியையும் கொண்டுவர வாழ்த்துகின்றேன்.

மகிழ்ச்சிகரமான இந்நன்னாளில் நாம் அனைவரும் முன்னேற்றம் மற்றும் வளர்ச்சிப்பாதையில் சிறப்புடன் பயணிக்க நம்மைநாமே அர்ப்பணித்துக் கொள்வோமாக! நம் முயற்சிகள் யாவும் நமது தேசம் அமைதி, வலிமை, வளமையை நோக்கி பயணித்திட உதவட்டும் என வாழ்த்துகின்றேன்.

தற்போது கொரோனா வைரஸ் காரணமாக நிலவிவரும் சூழலை கருத்தில் கொண்டு இவ்விழாவை கொண்டாடும் அனைவரும் தத்தமது வீட்டில் கொண்டாடுமாறு வேண்டுகிறேன். மேலும், தாங்கள் அனைவரும் மத்திய மற்றும் மாநில அரசால் வழங்கப்பட்ட அறிவுரைகளை கடைப்பிடிக்குமாறும் அன்போடு வேண்டுகிறேன். வீட்டிலேயே தனித்திருங்கள் மற்றும் பாதுகாப்பாக இருங்கள்,

**பன்வாரிலால் புரோகித்**
**தமிழ்நாடு ஆளுநர்**

---

*ராஜ்பவன், சென்னை -22* *ஒம்/-*

*நாள் :24.03.2020* *கூடுதல் இயக்குநர் (ம.தொ)*

**Press Release No.43** **Date : 24.03.2020**

## GOVERNOR THIRU. BANWARILAL PUROHIT'S UGADI, GUDI PADAVA AND CHETI CHAND MESSAGE

On the auspicious occasion of Ugadi, Gudi Padava and Cheti Chand, I extend my best wishes and heartiest greetings to the Telugu, Kannada, Marathi and Sindhi speaking people in Tamil Nadu.

These festivals mark the beginning of traditional New Year and reflect the composite culture and rich heritage of our country. May these festivals bring prosperity and happiness in our lives.

On this happy occasion, let us resolve to work together to usher in progress and development. May our efforts be directed to make our nation peaceful, strong and prosperous.

I request the people, to keep in mind the present situation due to corona virus and celebrate the festival at home. I humbly request one and all to follow the guidelines issued by the Central and State Governments. Stay at home and stay safe.

**BANWARILAL PUROHIT**
**GOVERNOR OF TAMIL NADU**

---

Raj Bhavan, Chennai -22 Sd/-

Date : 24.03.2020 Addl. Director (PR)